**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT QUARRY OF M/s.S.AYYAPPAN, ORDINARY STONE AND GRAVEL QUARRY OVER AN EXTENT AREA OF 1.86.00 HECTARES IN SURVEY NOS; 160/4, 159/1, 132/2B & 131/1C2(P), AT PULIYAMPATTI VILLAGE, PALANI TALUK, DINDIGUL DISTRICT AT 11.00 A.M ON 12.02.2026 IN M/s.SAMUTHAYA KOODAM, PULIYAMPATTI VILLAGE, PALANI TALUK, DINDIGUL DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. R. Kannan | Revenue Divisional Officer,<br>Palani Revenue Division,<br>Dindigul District. |
| 2. | Dr. P. Ramesh | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Dindigul District. |
| 3. | Mrs. G. Usha Rani | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Dindigul District |
| 4. | Mr. M. Prasanna | Tahsildar,<br>Palani Taluk,<br>Dindigul District. |
| 5. | Project Proponent & Public | As per attendance register (copy enclosed) |

**Introduction:**

**District Environmental Engineer, Dindigul:**

On behalf of the Tamil Nadu Pollution Control Board, I would like to express my sincere gratitude to the Respected Revenue Divisional Officer, Palani, for presiding over the public hearing meeting.

All members of the public, the Tahsildar, officials of the Revenue Department, Police Department, media representatives and social activists are also warmly welcomed to participate in this public hearing.

The press release for this project was issued on 23.12.2025 in Dinamalar and The New Indian Express newspapers. Public awareness about the public hearing meeting was conducted in nearby villages on 11.02.2026 using auto-rickshaws. Posters were pasted in prominent locations. Banners have been displayed. Additionally, the draft Environmental Impact Assessment project report and detailed

report were made available in both Tamil and English for public viewing on the website of the Tamil Nadu Pollution Control Board, as well as in three government offices.

As per the Environmental Impact Assessment issued by the Ministry of Environment, Forest and Climate Change, New Delhi on 14.09.2006 and amended in 2009, a Public Hearing is mandatory before the grant of Environmental Clearance. Therefore, the public hearing for the proposed project of Mr. S. Ayyappan, Ordinary Stone and Gravel Quarry, covering an area of 1.86.0 hectares at SF Nos. 160/4, 159/1, 132/2B, and 131/1C2(P), Puliyampatti Village, Palani Taluk, Dindigul District, is being conducted today.

After the project consultant has explained the proposed project, members of the public may express their opinions.

Members of the public are kindly requested to provide only their comments related to the project, stating their name and village. Comments may be expressed either orally or in writing. It is informed that the recorded comments will be compiled and forwarded to the State Environmental Impact Assessment Authority, Chennai, with the approval of the Revenue Divisional Officer and the District Collector.

The project consultant will provide explanations regarding this project.

**Technical Presentation, Environmental Consultant:**

M/s. S. Ayyappan of Ordinary Stone and Gravel Quarry presented the environmental details of the project to the public through a PowerPoint presentation.

**District Environmental Engineer, Dindigul:**

He stated that those who wish to comment may provide their name and name of their village.

**1. Mr. V. Nataraj, Puliyampatti**

He said that, regarding this quarry, M-Sand and Jalli are being transported using vehicles. They provide the necessary cooperation as required. Water is sprayed during the M-Sand production to suppress and control dust emissions and proper permits are issued. He further said that the crusher is helpful to the public and that they do not cause any obstructions.

**2. Mr. S. Sakthivel, Palani:**

He said that, since quarrying activities are carried out in accordance with the law, they may be permitted.

**3. Mr. M. Ramesh, Palani:**

He said that this quarry can be established as it will greatly contribute to the development of the country.

**4. Mr. Karuppusamy, Pallikoodthan Valasu:**

He stated that, he owns agricultural land opposite the quarry and that he would be satisfied as long as neither smoke nor stones reach has property.

**5 Mr. Vairamuthu, Pattali Makkal Katchi, North Dindigul District Secretary:**

It was stated that, although the benefits or harms of the quarry may be questioned by the public, the public consultation meeting had been advertised by the Tamil Nadu Pollution Control Board in the Dinamalar newspaper on 23.12.2025. However, no awareness campaign had been conducted by the Board in the surrounding areas such as Pallikoodthan Valasu, Amara Poondi and Melakottai regarding the potential impacts of the proposed stone quarry, and the process was described as merely a formality.

It was further stated that a visit had been made to the Tamil Nadu Pollution Control Board, Dindigul office on 11.02.2026; however, as the Environmental Engineer had left for lunch, the matter had been discussed with the next-level officer. It was mentioned that photographs had been taken in front of the temple after prior notice had been given, as a formality. Clarification was sought regarding the date on which the invitation letters issued by the Board had been distributed to the public and the number of posters displayed for the public consultation meeting. It was asserted that the meeting had been organized only as a formality for implementing a government or government-related project and that the project was openly opposed.

It was emphasized that the public consultation meeting should be communicated to all residents. Clarification was sought regarding the announcements made through the public address system, including the number of persons likely to be affected by the quarry, as raised by Mr. Ayyappan. It was questioned how many times the public had been informed that employment would be provided to 24 persons and that no environmental impact would occur. The meeting was again described as a mere formality. It was suggested that the meeting be reconducted, that proper notices be distributed to all residents in Amara Poondi and Melakottai, and that the public be duly invited. It was further stated, on behalf of the Pattali Makkal Katchi and in a

personal capacity, that a re-evaluation should be conducted and that an Environmental Clearance letter should be issued for the quarry.

**6. Mr. Nataraj, Palani:**

It was stated that the public consultation meeting was considered to be merely a formality. It was indicated that, to the best of his knowledge, no proper awareness or publicity had been carried out in the area. Therefore, it was suggested that the meeting be reconducted with adequate advertisement so that a larger number of people could assemble and express their views.

**7. Mr. Rajarathinam, Palani:**

Greetings were conveyed to all present. It was stated that the study had not been widely communicated to all residents. Therefore, it was suggested that the consultation be conducted again after properly informing all residents of the area, so that their opinions could be recorded in a public forum.

**8. Mrs. M. Jebakani, Dindigul:**

Greetings were conveyed to the presiding officer, elders of the surrounding villages and concerned citizens. It was stated that, whether for a stone quarry or an industrial establishment, the letters and opinions of volunteers and social activists are required to be considered in accordance with the 2018 Indian law. Her views were then presented on this basis.

It was stated that the operation of the quarry enhances the livelihoods of people in the surrounding villages by providing employment opportunities for both men and women, and that basic facilities are developed in the area. It was further stated that stones are essential for construction activities, including houses, hospitals and other buildings and office structures, and that the stone quarry is therefore highly necessary.

It was also stated that trees such as Pongai, Poovarasan and Neem are planted by the company for environmental protection, thereby contributing oxygen for humans, birds and animals in the area. It was indicated that the crusher had been established in such a manner that the environmental benefits of the trees would extend to all living beings. It was affirmed that the views expressed in respect of Tamil Nadu and the quarry were genuine. It was repeatedly emphasized that the project enhances livelihoods, and a request was respectfully made to the Environmental Officer to grant clearance for the quarry without obstruction.

**9. Mr. P. Kalimuthu, Puliyampatti:**

It was stated that no objection was raised regarding the establishment of the crusher.

**10. Mrs. Lakshmi, Dindigul:**

Greetings were conveyed to all present at the public consultation meeting. It was stated that, with the establishment of the quarry, employment would be provided to people in the surrounding areas and that the quarry operators are constructing hospitals, providing road facilities and extending other necessary amenities. Therefore, it was stated that the quarry should be permitted.

**Conclusion:**

**District Environmental Engineer, Dindigul:**

The meeting was concluded with thanks extended to the Revenue Divisional Officer, Palani, who presided over it, as well as to the Tahsildar who attended, departmental officers, police officials, media representatives, social activists and members of the public.

The list of those who have attended the meeting (Attendance Register), audio and video recordings (CD/Pen Drive), 1 petition received during the meeting and photographs of the public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Dindigul**

**Revenue Divisional Officer**
**Palani**

**Enclosures:**

1. Copy of the newspaper publication regarding the Public Hearing (in Tamil and English dailies).
2. Copy of the Attendance Register of participants who attended the Public Hearing (Total pages: 04; Total participants: 42).
3. CD/Pen drive containing the audio and video recording of the Public Hearing meeting.
4. Representation (petition) received from the public (Total: 1 No.).

**திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் , புளியம்பட்டி ஊராட்சி சமுதாயக்கூடத்தில் 12.02.2026 காலை 11.00 மணியளவில் நடைபெற்ற 1.86.00 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்ட தி/ள்.S.அய்யப்பன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள் – 160/4, 159/1, 132/2B & 131/1C2(P) , புளியம்பட்டி கிராமம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் மீதான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

**பங்கேற்றோர்:**

| | | |
|---|---|---|
| 1. | திரு.இரா.கண்ணன் | வருவாய் கோட்டாட்சியர்,<br>பழனி வருவாய் கோட்டம்,<br>திண்டுக்கல் மாவட்டம். |
| 2. | முனைவர். ப.ரமேஷ் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திண்டுக்கல் மாவட்டம். |
| 3. | திருமதி.கோ.உஷா ராணி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திண்டுக்கல் மாவட்டம். |
| 4. | திரு.ம.பிரசன்னா | வட்டாட்சியர்,<br>பழனி வட்டம்,<br>திண்டுக்கல் மாவட்டம். |
| 5. | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டில் உள்ளபடி<br>(வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) |

**முன்னுரை :**

**மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திண்டுக்கல்.**

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திட வருகை புரிந்திருக்கும் மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், பழனி அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்திருக்கும் வட்டாட்சியர், வருவாய் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், மற்றும் பொதுமக்களுக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்திற்கான செய்தி வெளியீடு 23.12.2025 அன்று தினமலர் மற்றும் இ;ந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் சம்பந்தமாக ஆட்டோ ரிக்க்ஷா மூலம் அருகாமையில் உள்ள கிராமங்களில் 11.02.2026 அன்று பரப்புரை செய்யப்பட்டது. துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது. சுவரொட்டிகள் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டது. பேனர் வைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளத்திலும், திண்டுக்கல் மாவட்டம் உட்பட 3 முக்கிய அலுவலகங்களிலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திட்ட அறிக்கை மற்றும் விவர அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம், புது தில்லி 14.09.2006 அன்று வெளியிட்ட மற்றும் 2009 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின்படி சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற வேண்டியது அவசியமானது என்பதால் திரு.S.அய்யப்பன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, ஹெக்டேர்ஸ் 1.86.0 நிலப்பரப்பில் புல எண். 160/4,159/1,132/2B மற்றும் 131/1C2(P) புளியம்பட்டி கிராமம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் அமைய உத்தேசிக்கப்பட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

திட்ட ஆலோசகர் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்த பின் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம்.

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் சொல்லி இத்திட்டம் சம்பந்தப்பட்ட கருத்துக்களை மட்டும் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து வடிவிலோ தெரியப்படுத்தலாம். தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்ட ஆலோசகர் இத்திட்டம் குறித்த விளக்கங்களை தங்களுக்கு தெரிவிப்பார் எனக் கூறினார்.

<u>தொழில்நுட்ப விளக்கம், சுற்றுச்சூழல் ஆலோசகர்:</u>

தி/எ்.S.அய்யப்பன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் விளக்கங்களை நிழற்படம் (Power point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

<u>மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திண்டுக்கல்.</u>

கருத்து தெரிவிப்பவர்கள் தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் கூறி கருத்துக்களை தெரிவிக்கலாம் எனக் கூறினார்.

1. <u>திரு. வி.நடராஜ், புளியம்பட்டி</u>

வணக்கம், இக்குவாரியில் எம்சாண்ட் ஜல்லி வாகனங்கள் மூலம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். தங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை அவர்கள் கொடுக்கிறார்கள். எம்சாண்ட் எல்லாம் பறக்காமல் இருக்க நீர் தெளிக்கிறார்கள். சரியான அனுமதி (Permit) கொடுக்கிறார்கள். அதனால் கிரஷர் தங்களுக்கு உதவியாக இருப்பதாகவும், அவர்களால் தங்களுக்கு எவ்வித இடையூறும் இல்லை என கூறினார்.

2. **திரு. எஸ்.சக்திவேல், பழனி.**

சட்டத்திற்கு உட்பட்டு நடப்பதால், குவாரியை அனுமதிக்கலாம் எனக் கூறினார்.

3. **திரு. எம்.ரமேஷ், பழனி.**

நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக இருப்பதால் இக்குவாரி அமைக்கலாம் எனக் கூறினார்.

4. **திரு. கருப்புசாமி, பள்ளிக்கூடத்தான் வலசு.**

குவாரி எதிரில் தான் தோட்டம் வைத்திருப்பதாகவும், புகையும் கல்லும் வராமல் இருந்தால் சந்தோஷம் எனக் கூறினார்.

5. **திரு. வைரமுத்து, பாட்டாளி மக்கள் கட்சி, திண்டுக்கல் வடக்கு மாவட்ட செயலாளர்**

வணக்கம், இக்குவாரி வருவதனால் என்ன நன்மை? என்ன தீமை? என்று இருந்தாலும் இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக 23.12.2025 தினமலர் நாளிதழில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் விளம்பரம் செய்தது ஆனால் இக்குவாரியை சுற்றியுள்ள பள்ளிக்கூடத்தான் வலசு, அமர பூண்டி, மேலக்கோட்டை பகுதியில் கல்குவாரி சம்பந்தமாக மாசு கட்டுப்பாட்டு வாரியம் போதிய அளவில் கல் குவாரியால் என்ன நடக்கும் என்பதற்கான விழிப்புணர்வு கொடுத்ததாக இல்லை. இது வெறும் கண்துடைப்பு.

தான், நேற்று 11.02.2026 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், திண்டுக்கல் அலுவலகத்திற்கு வந்ததாகவும் மாசு கட்டுப்பாட்டு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் மதிய உணவு இடைவேளைக்கு சென்று விட்டார்கள் எனவும் அதனால் அடுத்த நிலை அதிகாரியை பார்த்து பேசினேன். கண் துடைப்பிற்காக இந்த கோவில் முன்பு நோட்டீஸ் கொடுத்து புகைப்படம் எடுத்துள்ளீர்கள். நீங்கள் கொடுத்த அழைப்பிதழை பொதுமக்களுக்கு எப்பொழுது சென்று கொடுத்தீர்கள்? இக்கருத்து கேட்புக் கூட்டத்திற்காக எத்தனை சுவரொட்டிகள் அடித்தீர்கள்? இது எல்லாம் அரசும் அரசு சார்ந்த ஒரு திட்டத்தை

நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு கண் துடைப்பு கூட்டம் தான் இந்த மக்கள் கருத்து கேட்டுக் கூட்டம். தாங்கள் இதை பகிரங்கமாக எதிர்க்கின்றோம்.

இக்கருத்துகேட்பு கூட்டம் அனைத்து மக்களுக்கும் சொல்ல வேண்டும். ஒலிபெருக்கியில் நீங்கள் சொன்னதாக சொல்கிறீர்களே, எத்தனை மக்களுக்கு குவாரி வருகிறது என்று அய்யப்பன் என்பவர் கேட்டிருக்கிறார். குவாரி வந்தால் 24 பேருக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது சுற்றுச்சூழல் பாதிப்பு இருக்காது என்று எத்தனை முறை விழிப்புணர்வு சொல்லி இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள்? இது எல்லாம் ஒரு கண் துடைப்புக்கான ஒரு கருத்து கேட்புக் கூட்டம். இதனை மறு சீரமைப்பு செய்து அனைத்து மக்களுக்கும் இருக்கக்கூடிய அமர பூண்டி மேலக்கோட்டை அப்பகுதி மக்களுக்கு முறையாக துண்டறிக்கை கொடுத்து நம் மக்களை வரச் சொல்ல வேண்டும். மறுஆய்வு செய்து இக்குவாரிக்கு சுற்றுச்சூழல் கடிதம் கொடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும் தனது சார்பாகவும் இக்கருத்தை பதிவு செய்வதாக கூறினார்.

6. <u>திரு. நடராஜ், பழனி</u>

இந்த கருத்து கேட்பு என்பது கண் துடைப்பாக தான் பார்க்கின்றேன். ஏனென்றால் ஒழுக்கமான முறையில் எங்கேயும் எங்களுக்கு தெரிந்து எங்கள் பகுதியில் பிரச்சாரம் எதுவும் நடக்கவில்லை. ஆகையினால் மீண்டும் ஒருமுறை எல்லோருக்கும் விளம்பரப்படுத்தி அதிகமான மக்கள் கூடி கருத்து கேட்பதற்கு கூட்டம் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

7. <u>திரு. ராஜரத்தினம், பழனி</u>

அனைவருக்கும் வணக்கம், இந்த ஆய்வு பொதுவாக எல்லோர் மத்தியிலும் பரவலாக சேர்க்கப்படவில்லை என்பது தனது கருத்து. எனவே மீண்டும் ஒருமுறை சுற்றுப்பகுதி மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்திவிட்டு அனைவர் முன்னிலையிலும் கருத்து கேட்பது சரி என்று கூறினார்.

8. <u>திருமதி. M. ஜெபக்கனி, திண்டுக்கல்</u>

மரியாதைக்குரிய அலுவலர் அய்யா அவர்களுக்கும் மேலும் மற்ற அந்த கிராமத்தை சுற்றியுள்ள பெரியோர்களுக்கும் மற்றும் என்னை போன்ற

ஆர்வலர்களுக்கும் தனது வணக்கத்தை தெரியப்படுத்திக் கொண்டார். ஒரு கல் குவாரி நடத்துவதாக இருந்தாலும், ஒரு தொழிற்சாலை அமைப்பது என்றாலும் 2018 இந்திய சட்டத்தின் படி தன்னார்வலர்களுடைய மற்றும் சமூக ஆர்வலர்களுடைய கடிதமும் அவர்களுடைய கருத்துக்களும் இருக்க வேண்டும் என்பதை முன்வைத்து தன்னுடைய கருத்தை முன்வைக்கின்றேன்.

ஒரு குவாரி நடத்துவதால் மக்களுக்கு சுற்றி உள்ள அனைத்து கிராம மக்களுக்கும் வாழ்வாதாரத்தை உயர்த்தப்படுகிறது வேலைவாய்ப்பு ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி கிடைக்கின்றது. இரண்டாவது அடிப்படை வசதிகள் அங்கு அமைக்கப்படுகிறது. மூன்றாவது கட்டுமான பணிகளுக்கு கற்கள் கண்டிப்பாக தேவைப்படுகிறது. வீடுகள் கட்டுவதற்கு, மருத்துவமனைகள் கட்டுவதற்கு, மற்ற கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள் கட்டுவதற்கு கண்டிப்பாக கற்கள் தேவைப்படுகிறது. அதனால் தான் இந்த கல்குவாரி என்பது கண்டிப்பாக மிக மிக அவசியம்.

அதுபோல சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு மரங்கள் வைக்கப்படுகிறது. அந்த நிறுவனம் சுற்றுச்சூழலை காக்க, புங்கை மரங்கள், பூவரசம் மரங்கள், வேப்ப மரங்கள் அனைத்து மரங்களும் நடப்பட்டு, அங்கே விலங்குகள், அங்கே தங்கக்கூடிய பறவைகள், மனிதர்களுக்கும் அந்த ஆக்ஸிஜன் அந்த மரங்கள் மூலம் கிடைக்கக்கூடிய ஆக்ஸிஜன் மனிதர்களுக்கும், பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் கிடைப்பதற்கு இந்த கிரஷர் அமைத்துத் தருகிறார்கள். தமிழ்நாட்டிலும் சரி, இங்கு இருக்கக்கூடிய கல்குவாரியிலும் சரி, தான் சொல்லக்கூடிய கருத்துக்கள் உண்மையானவை. அதனால் மீண்டும் மீண்டும் மக்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய விஷயம் என்பதை கூறிக்கொண்டு இக்குவாரிக்கு சுற்றுச்சூழல் அதிகாரி அவர்களை தடையில்லா சான்று வழங்கும்படி அன்போடும், பண்போடும், பாசத்தோடும் கேட்டுக் கொள்வதாகக் கூறினார்.

9. <u>திரு. பி. காளிமுத்து, புளியம்பட்டி</u>

இந்த கிரஷர் வருவதால் எந்த பிரச்சனையும் இல்லை எனக் கூறினார்.

10. **திருமதி. லக்ஷ்மி, திண்டுக்கல்**

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம். இந்த குவாரி வருவதால் அங்கு சுற்றி உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு மட்டுமில்லாமல் குவாரியினர் மருத்துவமனை கட்டித் தருகிறார்கள், ரோடு வசதி மற்றும் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து கொண்டு இருக்கிறார்கள் அதனால் இந்த குவாரி வரவேண்டும் என்று கூறினார்.

**முடிவுரை**

**மாவட்ட சுற்றச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திண்டுக்கல்.**

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திக்கொடுத்த வருவாய் கோட்டாட்சியர், பழனி மற்றும் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள வட்டாட்சியர் அவர்களுக்கும், துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள், தொழிற்சாலை உரியையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பட்டியல் (வருகை பதிவு), ஒலி மற்றும் காணொளி பதிவுகள் (CD/Pen Drive), கூட்டத்தின் போது பெறப்பட்ட 1 மனு மற்றும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் புகைப்படங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திண்டுக்கல்

வருவாய் கோட்டாட்சியர்,
பழனி வருவாய் கோட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

**இணைப்பு:**

1. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 4 மற்றும் 42 நபர்கள்).
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.
4. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனு – 1 .